ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

12.03.2026

1. சற்குருநாதா சண்முகநாதா முருகா
சரணாகதி கொண்ட மக்களை
ஏற்புகொண்டு காப்பாற்றுத் தாயே
எங்களை கருணையோடு ஒரு பார்வை பாரப்பா

2. அப்பனே என வேண்டி மக்களெல்லாம்
அரங்கன் என் பீடம் அணுகி வந்து
காப்பாயென வேண்டி வருதலுற
கந்தப்பெருமானும் அருள்வாரெனக் கூறி

3. கூறியே விசுவாவசு சால் திங்கள்
குறைவிலா சதுர் கடை குருவார அருளாசி
ஆறுமுக அரங்கன் யானும் உரைப்பேன்
அகிலத்தில் பிரணவக்குடில் எனும் ஞானசபை

4. ஞானசபை அடையாளம் கண்டு
ஞானிகள் பூசையில் கலந்து
தானதருமமாம் கருமவினை போக்கும்
தக்கவழிதனை முழுமனதுடன் ஏற்று

5. ஏற்றுமே என் பீடம் வணங்கி
இருள் நீக்கி ஞான ஒளி காட்டும்
ஆற்றல் மிக்க சோதி வழிபாடு செய்து
அரங்கனென் சீடன் ராம்குமார் கரம்பட

6. கரம்பட யானே தருகின்ற
கருணைமிக்க கவசம் கொண்ட
வரம் தரும் தீட்சைதனை ஏற்று
வணங்கி தவதடம் அமர்ந்து

7. அமர்ந்து தியானமுடன் செபதபம்
ஆழ்மனதுள் செய்து நன்கு
நேமமிக்க குடிலின் அன்னதானம்
நல்அருளமுதை உண்டு இனிதே

8. இனிதே அன்னதான சேவையில்
இயம்பிடுவேன் பொருளுதவி செய்துவர
கனிவேலவனார் காட்சி கிட்டி
கவசமாக ஆறுமுகப் பெருமானுடன்

9. பெருமானுடன் அரங்கன் யானும்
பெருந்துணைவர வாழ்வில்
வருவாய்கள் ஏற்றம் மாற்றம்
வளர்ச்சிகள் எண்ணம் போல் கண்டு

10. கண்டுமே கேட்கும் வரமெல்லாம்
கருணை மழையாகப் பெருகி
உண்டாகும் அருள் பொருள் வளம்
உலகில் பிறவிப்பயன் அறிந்து

11. அறிந்துமே அரங்கனென் வழி
அகலா கடைத்தேற நேரும்
அறிந்து உலகோர் தேறவே
அரங்கன் யான் அருளாசி தந்தேன்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி